# வரதராஜப்பெருமாள் பெங்களூர் நகரில் மூவாயிரம் ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர் காட்டில்

கடந்த சில நாட்களாக எங்கே தங்கியிருக்கிறார் எனப் பலராலும் கேட்கப்பட்டு வந்த வடகிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாள் தற்போது பெங்களூரில் தங்கியிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்தியாவின் கர்நாடக மாநிலத் தலைநகரான பெங்களூரில் குடும்பத்தோடு தங்கியுள்ளதாக இலங்கை அரசுத் தரப்பில் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதேசமயம் "ஆயுதம் தாங்கிய எமது இளைஞர்கள் காட்டுக்குள் சென்றுவிட்டனர். இந்தியப் படையினர் வெளியேறியதிலேயே பாதுகாப்பு கருதி அவர்கள் காடுகளுக்குச் சென்றுள்ளனர் என்று ஈ பி ஆர். எல். எப். எம் பி யோகசங்கரி கூறியிருக்கின்றார். சுமார் மூவாயிரம் இளைஞர்கள் இங்கேயே உள்ளனர். தலைவர்களையே வெளியே அனுப்பியுள்ளோம் இலங்கை இராணுவத்தினருடனோ புலிகளுடனோ மோதுவதில்லை என முடிவு செய்துள்ளோம். உரிய நேரத்தில் வெளியே வருவோம் என்றும் யோகசங்கரி கூறியுள்ளார்.


பக்கங்கள் ஆறு — விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 39 வியாழன் 15-03-1990 (பங்குனி 02) ஷஃபான் 17


## இந்தக் கல்லூரியிலும் மதிய உணவில் புழுக்கள்

யாழ்நகரில் உள்ளபிரபல்யமான ஆண்கள்கல்லூரி ஒன்றில் நேற்றைய தினம் வழங்கப்பட்ட மதிய உணவில் வண்டுகளும் புழுக்களும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இப்பாடசாலையில் மதிய உணவிற்காக வழங்கப்பட்ட கடலையிலேயே வண்டுகளும் புழுக்களும் காணப்பட்டன. இதனால் ஆத்திரமடைந்த உயர் வகுப்புமாணவர்கள் கடலையை பாடசாலை அலுவலகம் மீதும் அங்குள்ளவர்கள் மீதும் வீசி எறிந்துள்ளார்கள். அண்மையில் இப்பாடசாலையின் அதிபரின் இடமாற்றம் குறித்து பல சர்ச்சைகள் இடம் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (03)

# விடுதலைப் புலிகள் பிரதிதலைவர் மாத்தயா இன்று யாழ்நகரில்

விடுதலைப் புலிகளின் பிரதித்தலைவர் திரு. மகேந்திரராசா மாத்தயா இன்று யாழ்ப்பாணம் வருவார் என புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன, விடுதலைப் புலிகளின் மக்கள முன்னணியின் தலைவரான மாத்தயா யாழ்நகரில் தங்கியிருக்கையில் முன்னணியின் அமைப்பு வேலைகளை பார்வையிடுவார். முன்னணியின் விஸ்தரிப்புகுறித்தும் யாழ்மாவட்டப் பொறுப்பாளர்களுடன் ஆலோசனைநடத்துவார்.

## பருத்தித்துறை தபால் நிலையத்தில் தங்கியுள்ள இலங்கைப் போலிஸாரை வெளியேற உத்தரவு

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை தலைமைத் தபால் நிலையத்தில் தற்போது தங்கியுள்ள இலங்கைப் பொலிஸாரை அங்கிருந்து வெளியேறுமாறு தபால் தந்தி ராஜாங்க அமைச்சு கேட்டுள்ளது.

தற்போது பருத்தித்துறை பொலிஸ்நிலையம் பருத்தித்துறை தபால் நிலையத்தில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

தபாற் தந்திச் சேவைகள் பெருமளவில்பாதிப்பு அடைந்து வருவது குறித்து பிரமுகர்கள் குழுவினரால் தபாற் தந்தி

— 6 ஆம் பக்கம் பார்க்க

## 1354ற்கும் அதிகமான புலிகள் இதுவரை வீரமரணம் - சூசை

தமிழீழவிடுதலைப் போராட்டத்தில 1354ற்கும் அதிகமான தமிழீழ வேங்கைகள் வீரமரணமடைந்து தமது உயிர்களை அர்ப்பணித்துள்ளனர். இத் தியாகிகளின் வீரமரணப் பாதை வெற்றிபெற நாம் எல்லோரும் இணைந்து போராட வேண்டும் தமிழீழவிடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்க பல்வேறு வகையான சூழ்ச்சிகள் நடைபெறுகின்ற போதும் அவை யாவும் தோல்வியிலேயே முடிந்துள்ளன.

இவ்வாறு, லெப்டினன் கேர்ணல் ஜொனியின் இரண்டவது ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டத்திலே உரையாற்றிய தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்க வடமராட்சிப் பொறுப்பாளர் திரு சூசை குறிப்பிட்டார், பருத்தித்துறை கிராமக்

—6 ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன் உணவுக் களஞ்சியத்தில் இந்தியப்படை வெளியேறியதால் இனி மா, அரிசி சேமிக்க வசதி

இந்திய அமைதிப் படையினர் காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தை விட்டு வெளியேறியதையடுத்து இவ் உணவுக்களஞ்சியம் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

காங்கேசன் துறையில் உள்ள ஐந்து உணவுக் களஞ்சியங்களில் இரண்டில் இந்திய அமைதிப் படையினர் தங்கியிருந்தனர். மூன்று உணவுக் களஞ்சி

— 6-ம் பக்கம் பார்க்க

## ஒவ்வொரு மாவட்டத்திலும் 12 வீதம் வலது குறைந்தோர்

இலங்கையிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் 12 சதவீதமான மக்கள் வலது குறைந்தவர்களாக உள்ளதாக யு. எஸ். அபிவிருத்தி நிதியம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் இருந்து தெரியவந்துள்ளது. இந்நிதியத்தின் குழுவினர் தற்போது யாழ். மாவட்டத்தில் தங்கி ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்கள். வலது குறைந்தவர்களுக்கு தகுந்த முறையில் நிவாரணம் செய்வதற்கான வழிமுறைகளையும்,

— 6 ஆம் பக்கம் பார்க்க

## இரு வார விபத்தில் 48 பேர் யாழ்.வைத்தியசாலையில் அனுமதி

யாழ். நகரில் போக்குவரத்து நெருக்கடி அதிகரித்ததை யடுத்து வீதி விபத்துகள் அதிகரித்து வருவதாக வைத்திய அறிக்கைகளில் இருந்து தெரியவருகின்றது.

கடந்த இரு வாரங்களில் மூன்று பேர் வீதி விபத்தினால் மரணமடைந்துள்ளதோடு 48 பேர் படுகாயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் (03)

## தொண்டர் ஆசிரிய நியமனம் விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

தொண்டர் ஆசிரியர்களை ஆசிரிய பயிலுநர்களாக நியமிப்பதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் இருபத்தாறும் திகதி வரை நீடிக்கப்பட்டதாக கல்விச் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்குப் பகுதிக்கு வர்த்தமானி வரத் தாமதமாகுவதாலேயே இம் முடிவுத்

— 6ஆம் பக்கம் பார்க்க

## யாழ். மாவட்ட பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி இன்று

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான மாவட்ட ரீதியான உடற்பயிற்சிப் போட்டி இன்றுவியாழக்கிழமை காலை யாழ் ஸ்ரான்லி கல்லூரிமைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள வேலணை, மருதனுமடம், பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம், வடமராட்சி கோட்டக் கல்விப் பிரிவுகளில் ஏற்கனவே நடைபெற்ற கோட்டமட்டத்

—6ஆம் பக்கம் பார்க்க

## யாழ். தபால் நிலையங்களில் ஓய்வூதியம் வழங்கமுடியாது

ஓய்வூதியம் பெறுவோர் தத்தமது பகுதித் தபால் நிலையத்தில் ஓய்வூதியத்தை பெறும் நடவடிக்கை தற்போது நடைமுறைப் படுத்தப்படாது என யாழ் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

1987ம் ஆண்டுக்கு முன்னர் தபாலகங்களிலே ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது தபாலகங்களில் பணப் புழக்கம் குறைவாக உள்ள காரணத்தினாலே இத் திட்டம் நடை முறைப்படுத்தப் படுவதில் சிரமம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (03)

## தேசியலொத்தர் சுவீப் மீண்டும் யாழ்நகரில்

யாழ்நகரில் மீண்டும் தேசிய லொத்தர் சபையின் சுவீப்டிக்கட்டுக்களை விற்பதற்கான நடவடிக்கைகளை சபை எடுத்து வருகிறது. இதற்கென முகவர்களை நியமிப்பதற்கான ஒழுங்குகளை தேசிய லொத்தர் சபை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது. (9)

## திருமலையில் மாகாணசபை தொழில்நுட்ப அலுவலர் கடத்தல்

வடகிழக்கு மாகாண சபையின் தொழில்நுட்ப அலுவலர் ஆயுதம் தாங்கிய நபர்களால் நேற்றுமுன்தினம் திருமலையிலுள்ள அலுவலகத்தில் வைத்தே ஜூலியன்குமார் என்ற இந்த உத்தியோகத்தர் கடத்தப் பட்டுள்ளார்.

இவரைக் கடத்தியவர்கள் யாரென்று தெரியவில்லையென பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன (தி)

## உள்ளே

கிளிநொச்சி மாவட்ட ஆசிரிய பயிலுநர் தெரிவானோர் விபரம்

(பக்கம் 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகள்

# பலவீனமான போதுபடை பலத்தைபிரயோகித்தது பலமிகுராணுவமானதும்பேச்சுவார்த்தைநடத்தியது

-டொமினிக்

எமது போராட்டத்திற்கு ஆதரவாக தொழிற்சங்கங்கள் போர்க் கோலம் பூணவேண்டும். தொழிற்சங்கங்களின் போராட்டங்கள்சம்பள உயர்வு எனும் நோக்கிற்காக மட்டும் நடத்தப்படுமானால் அவை குறுகிய வட்டத்துள் நின்றுவிடும் எனவே ஒருசமூகத்தின் அடிப்படைஉரிமைகள் மறுக்கப்படும் போது அதனை முதன்முதலில் சுட்டிக்காட்டி அதற்கெதிராக போர்க்கொடி உயர்த்த வேண்டியபொறுப்பு இந்நாட்டிலுள்ள தொழிற்சங்கங்களையே சாரும்.

இவ்வாறு மனோகரா தியேட்டரில் நடைபெற்ற தெங்கு பனம் பொருள் உற்பத்தியாளர் சங்கஉறுப்பினர் மத்தியில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டபொறுப்பாளர் திரு. டொமினிக் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தனது உரையில், இன்று உள்ள சூழல் பார்வைக்கு சுதந்திரமாகத் தென்பட்டாலும்,மக்கள் தமக்கு எந்தநேரத்தில் என்ன நடக்குமோ என்று புரியாத நிலை இருக்கும் தருணத்தில் நாம் சிவில்நிர்வாகம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம்.

மேலும் இலங்கைஅரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில்பேச்சுவார்த்தைகள் நடந்து வரும் இன்றைய காலகட்டத்தில் இலங்கை அரசு மீது நம்பிக்கை வைத்தோ அல்லது இலங்கை அரசு மனம்மாறி விட்டது என்றோ அல்லது அது தமிழர் நலனில்புதிய அக்கறை கொண்டுள்ளது என்று எண்ணியோ நாம் பேச்சுவார்த்தைக்குச் செல்லவில்லை. அப்படி எவரும் எண்ணிவிடக் கூடாது.

இலங்கை அரசு நாம் பலவீனமாய் இருந்த நேரத்தில் எம்மீது ராணுவ பலத்தைப் பிரயோகித்தது. ஆனால் இப்போது நாம்பலம்மிக்கராணுவ சக்தியாக மாறிவிட்ட நிலையில் எம்மைப்பேச்சு வார்த்தைக்கு அழைத்துள்ளது.

அதாவது இலங்கை அரசு எம்முடன்பேச்சுவார்த்தை நடாத்துகிறதென்றால் அதற்கு முதற் காரணம் எமது இராணுவ பலமே. எம்முடைய இந்தப் பலத்தை மேலும் மேலும் பெருக்குவதில் எம்மாலான அனைத்தையும்நாம்செய்வோம் மக்களை ஒரு கட்டுப்பாடான ராணுவ கட்டமைப்பிற்குள் கொண்டு வர வேண்டும். அதற்கு தொழிற்சங்கங்களின் உதவி இன்றியமையாதது எனவும் அவர் குறிப்பிட்டார்.


## A/L 90

## மீட்டல் வகுப்பு

இரசாயனவியல்-சேதனம்

திரு. செல்வா ,(B, Sc. Hons)

## ஆரம்பமாகின்றது

Sat)
Sun) 2·30 p·m

விபரங்களுக்கு

NIRU TUITION CENTRE, KONDAVIL
EDUCATION IS WEALTH
NTC

Station Road Kondavil

3119


## தாங்கியில் கசிவு

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மண்ணெண்ணெய்த் தாங்கியில் கசிவு ஏற்பட்டுள்ளது. நிலத்துக்கடியில் அமைக்கப்பட்ட இத்தாங்கியில்ஒட்டை ஏற்பட்டதால் சங்கத்தின் மண்ணெண்ணெய் விநியோகத்தில் தற்போது பரல்களே பயன் படுத்தப்படுகின்றன. (30)

## கயிறு இழுத்தவர் மாரடைப்பினால் மரணம்

இளாலி ஶ்ரீ.சு.த.க வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இல்லமெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டியின் போது பழைய மாணவர்கள் நிகழ்ச்சியில் 800 மீட்டர் ஓட்டம் கயிறு இழுத்தல் போட்டிகளில் பங்கு பற்றிய பழைய மாணவன் வஸ்தியாம்பிள்ளை அன்ரன் போட்டிகள் முடிவடைந்து இருமணி நேரத்தின் பின் மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார். (18)

## பெங்களூரில் யாழ் மகளிர்

பெங்களூரில் இம்மாதம் 17-ம் திகதி முதல் 26-ம் திகதி வரை நடைபெறவுள்ள சார்க் மகளிர் பிரிவு மகாநாட்டில் வடபகுதியில் இருந்து மூன்று பேர் பங்குபற்ற உள்ளனர்.

பளை அபிவிருத்திச்சபையின் மகளிர் பிரிவைச்சேர்ந்த செல்வி. சீதா வேலுப்பிள்ளை, திருமதி பவானி தங்கத்துரை, திருமதி. எஸ். அருளானந்தம் ஆகிய மூவருமே இந்த மகாநாட்டிற் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## பளையில் பேடன் பவல் தினம்

பளை மகாவித்தியாலய சாரணர் குழு சாரணர் தந்தை பேடன் பவல் தினத்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாடியது இந்நிகழ்ச்சியிற் கட்டுரைப்போட்டியில் வெற்றி யீட்டியவர்களுக்குப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

சாரணர் கண்காட்சியும் சிறந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி அதிகாரி எஸ் கமலநாதன் பதிவேட்டுச் சிறந்த முறையில் ஒழுங்கு யிருந்தார்.


## பல்கலைக்கழகப் பட்டப் படிப்புகள் (வெளிவாரி)

## கல்வியாண்டு 1990/91

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டப் பாட நெறிகளான

★ கலைமாணி (B.A.)

★ விஞ்ஞானமாணி (புள்ளிவிபரவியல்) (B Sc)

★ வணிகமாணி (B Com)

க. பொ. த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

புதிய பிரிவு விரிவுரைகள்

01-04-1990-ல் ஆரம்பமாகின்றன

விண்ணப்ப முடிவுத் திகதி 20. 03. 1990

விபரங்களுக்கு:

உதவிப்பதிவாளர்

## பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

மாணவர் கவனத்திற்கு:

* பல்கலைக்கழகங்களின் முன்னணி விரிவுரையாளர்கள் விரிவுரைகளை வழங்கும் ஒரே நிறுவனம் யாழ்நகரில் இதுவே.
* வணிகமாணி பட்டப்பாட நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 15 - 3 - 1990க்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்ளல் வேண்டும்.

03106


## இன்று மடு பங்குனி உற்சவம்

# கானகத்தின் மத்தியில் ஒரு கருணை மாதா

மருதமடு திருப்பதி ஆலயத்தின் முன்பாக அலை அலையாக மக்கள் வெள்ளம். மருதமடு அன்னை சொரூபமாக பீடத்தின் முன்பாக வீற்றிருக்கின்றாள். அம்மா தாயே என்குரல் உன் காதில் விழவில்லையா? காதென்ன செவிடா? கண் என்ன குருடா? என்று தமிழ் மக்களின் வேண்டுதல் ஒலி வானைப் பிளக்கின்றது. சிங்கள மக்களும் சாந்த மரிய நீ தேவ மேனியஆசீர்வதிக்கவேவா என வேண்டுகின்றனர். மருதமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே! என்ற பாடல்களும் காதில் ஒலிக்கின்றன. நீல வெண்ணிறக் கொடிகளுக்கிடையே "வாழ்க மரியே" என்ற வாசகம் காற்றில் அசைந்து கொண்டிருக்கிறது. செந்தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள், பறங்கியர், வெள்ளைக்காரர் என்று பாகுபாடின்றி மக்கள் அனைவரையும் மகிழ்ச்சியுடன் கண்நோக்குகிறாள் மருதமடு அன்னை. இந்தக் கண்கொள்ளாக் காட்சி அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கிறது. கடந்த மூன்று வருடங்களாக எந்தவித திருவிழாக்களும் மருதமடுத் திருப்பதியில் நடைபெறவில்லை. ஆனால் நேர்த்தி செலுத்துபவர்கள் அமைதியாக இங்கு வந்து அன்னையிடம் வேண்டிச் செல்கின்றனர். மருதமடு அன்னையின் புதுமைகளைக் கேள்விப்பட்ட பிறசமயத்தவர்களும் இங்கு வந்து செல்கின்றனர். தற்பொழுது மன்னார் ஆயர் அருட் - திரு தோமஸ் சௌந்தர நாயகம் அடிகள் நிர்வாகத்தின் கீழ் மருதமடு திருப்பதி மிகப்பெரிய யாத்திரை ஸ்தலமாக விளங்கி வருகிறது.

## மாந்தை மாதா

வேத கலாபனையின் போது அரசன் சங்கிலியன் மன்னார் கத்தோலிக்க கிறிஸ்தவர்களைக் கொன்றொழித்த போது மாந்தைக் கிறிஸ்தவர்கள் தாங்கள் பாதுகாத்து வணங்கி வந்த மாதமடு அன்னையின் சொரூபத்தை யானை, புலி, கரடி, சிங்கம் வாழும் மருதமடு கானகத்திற்கு கொண்டு வந்து வணங்கி வந்தார்கள் என்று மன்னார் வேதாட்சிகள் சரித்திரம் கூறுகின்றது. மாந்தை மாதாதான் இன்று கோடானு கோடி மக்களின் வானக அரசியாக மனுகுலத்தின் மாதாவாகக் காட்டுக்குள் இருந்து கருணை மழை பொழிந்து புதுமைகள் பல செய்து மக்களின் துன்பங்களைத் தீர்த்து வருகின்றார்.

## திருவிழாக்கள்

ஆடி, 2ந் திகதி அடுத்த மடுத்திருவிழாவும், ஆவணி 15ந் திகதி பரலோக அன்னையின் விண்ணேற்பு தினமாகவும் கொண்டாடப்படுகிறது. மற்றைய திருவிழாக்கள் - புரட்டாதி 08 ஐப்பசி - 07 மார்கழி 08 - ஒவ்வொரு சனிக்கிழமையும் திருப்பலி நடைபெற்று வருகிறது.

வீ. பிரான்ஸிஸ்

# கோண்டாவில் பகுதியில் புகையிலை வெட்டு ஆரம்பம்

இப்பகுதியில் புகையிலைவெட்டும் வேலை ஆரம்பமாகி உள்ளது. கடந்த வருடங்களைப்போன்றே இம்முறையும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு அறுபது ரூபாய் முதல் எழுபது ரூபாய் வரை வழங்கப்படுகின்றது.

அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கு தற்பொழுது வழங்கப்படும் நாளாந்தக்கூலி போதாது என்று அதிருப்தி அடைந்துள்ள தொழிலாளர்கள் தமது நாளாந்தக் கூலியை உயர்த்தித் தருமாறு தோட்ட சொந்தக் காரர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (41)

## இருபாலைப் பகுதி நிவாரணம்

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இருபாலை கிராமசேவையாளர் பகுதியைச்சேர்ந்த 186 விவசாயிகளுக்கு ரூபா .4000 நிவாரணக் கொடுப்னவுகள் 17ந் திகதி சனிக்கிழமை இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக்கிளையிற் காலை 9 மணிக்கும் 1 மணிக்குமிடையில் வழங்கப்படவுள்ளது.


## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்

(வெளிவாரிப் பட்டப்படிப்புகள்)

## G. A. Q., 91

* A/L இல் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
* இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகளை எமது நிறுவனத்திலேயே பெற்றுக் கொள்ளவும்.
* விண்ணப்பப் படிவங்களை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

விரிவுரையாளர்கள்:

| | |
|---|---|
| பொருளியல் | — குமாரவேல் |
| புவியியல் | — குணராஜா |
| தமிழ் | — குழந்தை |
| இந்துநாகரிகம் | — அருள்தங்கை |
| அரசியல் | — குமார் |
| மெய்யியல் | — சம்பந்தன் |

நிர்வாகி
S. அருள்நங்கை

03122


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழியர் நட்டஈடு

அரசாங்கத்துறை, தனியார்துறை என்ற பாகுபாடின்றி இந்நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அவர்கள் நிரந்தரமாக ஊனமுற்றால் அல்லது இறந்தால் இரண்டரை லட்சம் ரூபா நட்டஈடாக வழங்கப்படவுள்ளது.

இது சம்பந்தமான தொழிலாளர் நட்டஈடுத் திருத்தச் சட்டமூலம் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனைப் பிரதமரும், தொழில் மற்றும் சமூகநலன் அமைச்சருமான டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

இதுதவிர வேறு வகையில் நோயினால் பாதிப்படையும் போது நோயின் தன்மை, பாதிப்பிற்கு அமைய நட்டஈடுத் தொகை கணித்து வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தொழிலாளர் காப்புறுதி, ஓய்வூதியம் பற்றி எல்லாம் சட்ட மூலங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

தொழிலாளர்களின் நலன்களைப் பேணுவதற்காகவே இவ்வாறான சட்டமூலங்கள் எல்லாம் கொண்டு வரப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஆனால், இவை எந்தளவிற்குத் தொழிலாளர்களின் நலன்களைப் பேணுகின்றன என்பது கேள்விக்குறியே.

## இதயநாதம்

**வியாழக்கிழமை 15 — 03 — 1990**

**நல்வாக்கு**

ஒருவன் தன்நெஞ்சம அறிவதாகிய ஒன்றைக் குறித்துப் பொய் சொல்லக் கூடாது. பொய்சொன்னால் அதைக்குறித்துத் தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.
-திருக்குறள்

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

இவை யாவும் எழுத்தில் மட்டுமே பெருமளவில் இருந்து வருகின்றன என்பதும் வெளிப்படையான விஷயம்.

நாட்டில் மொத்தம் நாற்பத்தைந்து லட்சம் ஊழியர்கள் பணி புரிகின்றனர் இவர்களில் பதின்மூன்று லட்சம் பேர் அரசாங்கத்துறையிலும், ஏனைய முப்பத்திரண்டு லட்சம் பேர் தனியார் துறையிலும் பணிபுரிகின்றனர்.

இவர்களுள் பெருமளவான தனியார் துறை ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் வழங்கப்படுகின்றனவா என்றால் இல்லை என்பதே விடை.

மிகச் சாதாரணமாக - அண்மைக் காலங்களில் சிவில் நிர்வாகம் சீர்குலைந்திருந்ததைச் சாட்டாக வைத்து - தனியார்துறை ஊழியர்களின் மிகச் சாதாரண உரிமைகள் கூட மீறப்பட்டுள்ளன.

எட்டு மணித்தியால வேலை, மேலதிக வேலை நேரம், மேலதிக நாட்களுக்கான ஊதியம், ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றில் எல்லாம் ஊழியர்களின் நலன்கள் மீறப்பட்டுள்ளன.

இந்தச் சாதாரண நலன்கள்கூட பேணப்படாதபோது ஊழியர்களுக்கான இறப்பு அல்லது ஊனமுற்றதற்கான நட்டஈடு, நோயினால் பாதிக்கப்பட்டதற்கான நட்டஈடு பற்றிப் பேசுவதில் என்ன அர்த்தமிருக்கக் கூடும்.

இத்தகைய சட்ட மூலங்கள் எல்லாம் வெறும் காகிதங்களில் வரையப்பட்ட சட்டங்களாக, எதுவித பயனுமின்றி, கூட்டம் போட்டுப் பேசும்போது மட்டும் ஊழியர்களுக்கு இவ்வளவு உரிமைகள் இருக்கின்றன எனக் கூச்சல் போட மட்டுமே உதவும்.

எனவே இவை வெறும் காகிதச் சட்ட மூலங்களாக அன்றி, ஊழியர் நலன்களைப் பேணும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதுவரை இவை வெறும் சட்டங்களாகவே இருக்கும்.

தற்கொலையும், தற்கொலை முயற்சிகளும்

# தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களின் அறிவின்மையால் அதிர்ஷ்டவசமாக பலர் பிழைத்துக் கொள்கின்றார்கள்

Dr. A. செல்வரட்ணம்
M. B. B. S. (Cey)
M. R. C (PSYCH) (Eng.)

மனோதத்துவ மேதையான (Sigmund Freud) ஒவ்வொரு மனிதனிடமும் வாழ வேண்டுமென்ற ஆசையும் (Eros) சாக வேண்டுமென்ற ஆசையும் (Thanatos) இருப்பதாக கூறியுள்ளார். ஆகையால் மக்களில் சிலர் தற்கொலை செய்வதோ அல்லது தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதோ நமக்கு ஆச்சரியமூட்டத் தேவையில்லை. ஆனால், ஆஸ்பத்திரி வட்டாரங்களின் கணக்கீட்டுப்படி யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று நான்கு வருடங்களாக மேற்படி முயற்சிகள் அதிகரித்து வருவதற்கான சான்றுகள் தென்படுகின்றன.

தற்கொலை முயற்சியில் ஈடுபடும் அத்தனை பேரும் சந்தர்ப்ப வசத்தால் தப்புகின்றார்களே ஒழிய அவர்கள் கையாளும் முறைகள் தற்கொலைக்கு வழிவகுக்கின்றன. வைத்தியர்களின் திறமையாலும், தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்கள் கையாளும் முறைகளின் அறிவின்மையினாலுமே அதிஷ்டவசமாக அநேகர் பிழைத்துக்கொள்கின்றனர்.

அரை நூற்றாண்டுக்கு முன்பு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் கையாண்ட முறைகள் வேறு. தற்போதைய சமுதாயத்தினர் கையாளும் முறைகள் வேறு. முந்திய காலத்தில் கிணற்றுக்குள் பாய்தல், தன்னைத்தானே சுட்டுக் கொள்ளுதல் கயிற்றில் தூங்குதல், உயரமான இடங்களில் இருந்து பாய்தல் முதலிய முறைகளையே மக்கள் கையாண்டு வந்தார்கள். ஆனால் இன்றைய சமுதாயத்தினர் கிருமிநாசினியை அருந்துதல், அலரிககாய்(Yellow Oleander) சாப்பிதல், மன நோயாளருக்குக் கொடுக்கும் மருந்துகளை உட்கொள்ளுதல் போன்ற முறைகளையே அநேகமாகக் கையாளுகிறார்கள்.

பொது மக்களிடையே மனோவியாதியால் பாதிக்கப்பட்டவர்களே அநேகமாக தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதாக ஒரு தப்பபிப்பிராயம் நிலவுகிறது. ஆனால் தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களில் மனோ வியாதியால் ஒரு சிறு விகிதமே. அநேகமானோர் திடீர் உணர்ச்சி வசப்பட்டே (Impulsiveness) தற்கொலை முயற்சியில ஈடுபடுகிறார்கள். இவர்களுக்கு உணர்ச்சி வசப்படும் கட்டத்தில் போதிய உபதேசம் செய்வதற்கு வைத்திய வசதிகள் போதாது. இவர்களில் அநேகமானோர் ஒரு முறையே தங்கள் வாழ்க்கையில் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள். முயற்சி முடிந்து வைத்திய ஆலோசனைக்கு செல்லும் போது இவர்கள் சர்வ சாதாரணமாகச் சிரித்துக்கொண்டு பதில் சொல்வது வைத்திய நிபுணர்களுக்கே சில நேரத்தில் ஆத்திரமூட்டக்கூடிய ஒரு செயலாக அமைந்துவிடுகிறது.

மனிதரில் அநேகமானோர் ஆக்கிரமிப்புச் (Aggression) சக்தி படைத்தவர்கள். இந்த ஆக்கிரமிப்புச்சக்தி தனக்குத் தானே திசை திருப்பப்பட்டவுடன் தற்கொலை முயற்சி ஏற்படுகின்றது. பொதுவாக நூற்றுக்கு 65% மேற்பட்டோர் பெற்றோரால் அல்லது மது போதையில் இருக்கும் கணவனால் வாய்ப்பேச்சு மூலமோ அல்லது வேறு விதமாகவோ கண்டிக்கப்பட்டவர்கள். இவர்கள் ஆக்கிரமிப்புச் சக்தியை இவர்களிடம் காட்ட முடியாது தன்னைத்தானே கண்டிக்கும் நோக்கத்தோடு தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள்.

தற்கொலை முயற்சிகளை மூன்று விதமாக வகுக்கலாம். (1) (Ecoistic Suicide) இவர்கள் அநேகமாகத் தன்நலம் கருதும் பாவனையிலேயே தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள். தொய்வுநோய், புற்றுநோய் முதலிய தாங்கொணா நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் இவ்விதத் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள்.

(2) (Altruistic Suicide) தனது சமூகத்துக்கு நலன் தருவதாகக் கருதி இவ்வர்க்கத்தினர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். ஜப்பானியர்களிடையே காணப்பட்ட (Hara Kiri) என்னும் தன் வயிற்றைத் தானே கிழித்துத் தற்கொலை செய்யும் முயற்சி இவ்வகைப்படும். அரசியற் காரணங்களுக்காகவும், பெரிய அரசியற்தலைவர் இறந்தாலோ, தம் இனத்தவர் தாங்கொணா இன்னல்களை அனுபவித்தாலோ ஒரு சிலர் தங்களுக்குத் தாங்களே மண்ணெண்ணெய், பெற்றோல் முதலியவற்றை ஊற்றித் தற்கொலை செய்து கொள்கிறார்கள். (IMMOLATION)

(3) (ANOMIC SUICIDE) சமுதாயத்தில் சமயாசார அறத்தைப் பற்றிய அல்லது கல்வி மேம்பாட்டு நிலையின் தரம் குறையும்போது பெரும்பாலும் இளம் வயதுடையோரிடையே ஏற்படும் தற்கொலை இவ்வர்க்கத்தைச் சாரும். தற்கொலை முயற்சியைப்பற்றி அடிக்கடி கதைப்பவர்கள் தற்கொலை செய்து கொள்வதில்லை என்ற போலி நம்பிக்கை பெரும்பாலான மக்களிடம் நிலவுகின்றது.

இது ஒரு வீண் பிரமையே. தற்கொலையைப் பற்றிப் பேசுபவர்களிடம் உறவினர்களோ அல்லது நண்பர்களோ மிகவும் உன்னிப்பான கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

அறுபது வயது தாண்டியவுடன் அநேகமான நபர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் காண்கிறார்கள். இவர்களிற் தாரமிழந்த பெண். தாரத்தைப் பிரிந்து இருப்பவர்கள், தனிமையில் வாழ்பவர்கள் என்ற வரிசைக் கிரமப்படி தற்கொலை அபாயம் (Risk) கணிக்கப்பட வேண்டும். இவர்கள் தங்கள் தற்கொலை எண்ணத்தை மிகவும் அந்தரங்கமாக வைத்து தற்கொலை முயற்சியில் வெற்றியும் அடைகிறார்கள். தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு வெற்றியடைபவர்கள் அநேகமாக வயது வந்த ஆண்களே.

மதுபானம் பாவிப்பவர்களிடம் தற்கொலை அபாயம் அதி[illegible] ஆக்ரோஷத்தைத் தணித்துக் கொள்ள முடியாமல் ஒரு சிறு ஏமாற்றத்தையோ, கவலையையோ தாங்காமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள். வேறுசிலர் தற்கொலை முயற்சிக்கு முன்பு மது அருந்தி ஒரு போலித் தைத்திரியத்தை (Dutchcourage) வரவழைத்துக் கொண்டுதற்கொலைமுயற்சியில் ஈடுபடுகிறார்கள். அண்மைய காலங்களில மதுபோதையில் ராணுவ முகாம்களை அண்மித்து சந்தேகத்தின் பேரில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு சாவை அரவணைத்துக் கொண்டவர்கள் ஒரு சிலர்.

எங்கள் அனுபவத்தில் தற்கொலை முயறசியில் அநேகமா கஈடுபடுபவர்கள் 15முதல் 35 வயதுக்குட்பட்ட இளம் வாலிபர்களும் பெண்களுமே. இவர்களுள் பெண்களே அநேகமான வர்கள் இவர்களின் தற்கொலை முயற்சி, பிறரைப் பழிவாங்கும் எண்ணத்துடன் ஏற்படுகின்றது. ஆனால் விளையாட்டே வினையாகிவிடலாம்.

## ஆளுமையும் தற்கொலை முயற்சியும்

எமது சமுதாயத்தில் ஆளுமை குன்றிய(Inadequate Personality) அல்லது சமூகத்திற் கெதிராக ஆளுமை மாறுபட்ட (Psychopathic personalitites) நபர்கள் பலரை தற்சமயம் காணக்கூடியதாக இருக்கின்றது போதை வஸ்துக்கு (EPS Heroin) அடிமைப்பட்டவர்களில அநேகர் சமூகத்திற்கு எதிராக ஆளுமை மாறுபட்டவர்களாகவே இருக்கின்றார்கள். இவர்களை அரசினர் வைத்திய சாலைகளில் சேர்க்காமல் விசேஷ மருத்துவ நிலையங்களில் சிகிச்சை அளிப்பதற்கு தற்சமயம் முயற்சிகள் எடுக்கப் பட்டு வருகின்றன இவர்களில் பலர் Shaviug Blade) உடைந்த, போத்தல் துண்டு, கண்ணாடித் துண்டு முதலிய வற்றால (Deliberate Self harm) தங்களைத் தாங்களே காயப்படுத்திக் கொள்கிறார்கள், பொது வைத்திய நிபுணர்களுக்கே (Physicians) இது ஒரு அதிர்ச்சி தரும் செயலாக இருக்கிறது ஆனால், இன்றைய மருத்துவ வளர்ச்சியின் தராதரத்தை நோக்கும் போதே மேற்படி நபர்களுக்கு வைத்திய சிகிச்சைப்படி ஒன்றும் செய்ய முடியாத நிலையில் வைத்திய நிபுணர்கள் இருக்கின்றார்கள்.

பதினைந்து வயதுக்கு உட்பட்டவர்களில் தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்கள் மிகச் சிலரே. இவர்களிற் பெரும்பாலோர் ஆண்பிள்ளைகளாவார்கள். வீட்டை விட்டு ஓடும் சிறுவர்கள் தற்கொலைக்கு ஒப்பான ஒரு செயலைச் செய்கின்றார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றார்கள். இவர்களுக்குச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு சிறுவர்களுக்கான சிறைச்சாலையில் (Borstal) வைக்கப்பட்டு இளம் குற்றவாளிகளைச் சீர்திருத்தும் முறை பாவிக்கப் படவேண்டும்.

## மனோவிரத்தியும் தற்கொலை முயற்சியும்.

மன நோயாளர்களிற் தீவிர தற்கொலை முயற்சியில் ஈடுபடும் அநேகர் காரணமின்றி ஏற்படும் மனோ விரக்தி (Endogenous Depression) என்னும் நோயினால் பாதிக்கப்படுகின்றார்கள். இவர்களுக்கு உடல் உளச் சோர்வும் (Psychomotor Retardation) மனோ விரத்தியும் ஏற்படுகின்றன. உடல் உளச் சோர்வால் இவர்களுக்குத் தற்கொலை முயற்சியில் ஈடுபடும் தெம்பு இல்லை. நவீன மின்வலிப்புச் சிகிச்சை (Electroplexy) முறை பாவிக்கப்பட்டவுடன் இவர்களின் உடல், உளச் சோர்வு மாறி விடுகிறது.

ஆனால் மனோ விரக்தி மாறுவதற்கு இரண்டு அல்லது மூன்று கிழமைகள்வேண்டும். இந்தக் குறிப்பிட்ட காலத்துக்குள் அவர்கள் தற்கொலைமுயற்சியில் ஈடுபடலாம். ஆகவே மின்வலிப்புச் சிச்சை முடிவுற்றவுடன் இவர்களை வைத்தியசாலையில் இருந்து அவசரமாக வீட்டிற்கு அனுப்பி வைக்கக் கூடாது.

## கொலையும்,தற்கொலையும்:-

மனோ விரக்தியால் பாதிக்கப் பட்ட தாய்மார்கள் தாங்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடு முன் தமது பிள்ளைகளைக் கொலைசெய்து விட்டுப், பின்பு

— 5ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சியில்

# அரச, தனியார் கல்வித்துறை பற்றி பல்கலைக்கழக மாணவர் ஆய்வு

வடமராட்சியில் அரச, தனியார் கல்வித்துறைகள் பற்றி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வு நடாத்தி வருகிறார்கள்.

தற்போது வடக்குக்கிழக்கு மாகாணங்களில் தனியார் கல்வித்துறை, அரசாங்கக் கல்வித்துறை இரண்டும் பெரும் பிரச்சினைக்குரிய விடயங்களாக உள்ளன.

எனவே இக் கல்வித் துறைகளின் தரம் பற்றிய ஆய்வொன்றினை யாழ்பல்கலைக்கழகவெளிக்களப்பயிற்சி மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்கள் அரசாங்க பாடசாலைகள் போன்றவற்றிற்குநேரடியாகச் சென்று ஆய்வுகளை நடாத்தி வருகின்றனர். இவர்களின் ஆய்விற்கு வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகம், தனியார் கல்வி நிலையம் போன்றவை பூரண ஒத்துழைப்பு நல்கி வருகின்றன (39)

# யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை நிதிநெருக்கடியில்

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலையின் செயற்பாடுகள் நிதிப்பற்றுக்குறையினால் குறைந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் செயற்கைக் கால்கள் பொருத்தவுள்ளபோதும் இதுவரை 370 பேர் பதியப்பட்டு 319 பேருக்கு செயற்கைக் கால் பொருத்தப்பட்டுள்ளது.

நிதிப்பற்றுக் குறையினால் கால் பொருத்தும் செயற்பாடுகள் விரைவாக நடைபெறுமல் உள்ளன. பொதுஸ்தாபனங்களும் தனியார்களும் நிதி உதவி செய்தால் கால் இழந்தவர்களுக்கு செயற்கைக் கால் பொருததும் வேலைகள் துரிதமாக இடம் பெறுமென தெரிவிக்கப்படுகின்றது. (03)

# சண்டிலிப்பாயில் கட்டட வேலை பூர்த்தி

கடந்த அசம்பாவிதங்களினால் முற்றாக சேதமாகப்பட்ட சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை முழுமையாக திருத்தியமைக்கபட்டு முடியும் தறுவாயில் உள்ளது. தற்போது பெரும் இடநெருக்கடியுடன் உதவி அரசாங்க அதிபர் விடுதியில் இயங்கி வரும் இவ்வலுவலகம்விரைவில் புதுப்பித்து கட்டப்பட்ட கட்டிடத்தில் இயங்கத் தொடங்கும் எனத் தெரிய வருகின்றது (30)

# லண்டனில் தமிழீழ ஆய்வு அபிவிருத்திக் கருத்தரங்கு

தமிழீழத்தில் ஆய்வு அபிவிருத்திக்கான ஆரம்ப முயற்சித்திட்டம் என்ற தலைப்பின் கீழ் கருத்தரங்கு ஒன்று தமிழீழ ஆய்வு நிறுவனத்தினரால் இம்மாதம் 24-ம், 25-ம் திகதிகளில் லண்டனில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தமிழீழத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் தமிழ் மக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் உள்ளூர்த் தொழில் நுட்பத்திறன், குடிசைக்கைத்தொழில், விவசாயம், மீன்பிடித் தொழில், சக்திவளம், சுகாதாரம், ஆகிய தலைப்புக்களில் ஆய்வுக்கட்டுரைகள் நிறுவனத்தினரால் வரவேற்கப் படுகின்றன

தமிழீழத்தில் வாழும் மக்கள் அனைவரினதும் அரசியல் ஸ்திரத்தன்மையையும் வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்துவதற்குரிய ஆக்கபூர்வமான திட்டங்கள்செயல்முறைகளைக் கண்டறிய ஆய்வாளர்கள், உதவி நன்கொடை நிறுவனங்கள், புத்திஜீவிகள் அனைவரிடமிருந்தும் ஆதரவையும், பங்களிப்புக்களையும் மேற்படி நிறுவனம் எதிர்பார்த்துள்ளது.

# லண்டன் உயர் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

லண்டனிலுள்ள வெளிநாட்டு அபிவிருத்தி இயற்கை வளம் கற்பிக்கும் நிலையம் வெப்பநிலை வலைய நாடுகளில் குளிரூட்டி மூலம் விவசாயப் பொருட்களுக்கான பயிற்சிக்கான விண்ணப்பங்களை மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தினூடாகக் கோரியுள்ளது. இப்பயிற்சி இவ்வாண்டு ஆகஸ்ட் 17 முதல் டிசெம்பர் 07 வரையிலான தெனவும் விண்ணபதாரிகளுக்கேற்ப இவை நீடிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பயிற்சிக்கு உயிரியல், விவசாய, பொறியியல் பட்டதாரிகளும் இத்தொழில் அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். பயிற்சி ஆங்கிலத்தில் நடைபெற இருப்பதால் ஆங்கில பட்டதாரியாக இருத்தல் வேண்டும் அல்லது பிரித்தானிய கவுன்சில் நடாத்திய ஆங்கில சோதனையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

இப்பயிற்சிக்கான நிதி உதவி பெறக்கூடிய ஐந்து நன்கொடை வழங்கும் நிலையங்களின் விலாசங்கள் தரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை இம்மாதம் முடிவிற்குள் பெற்று தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கான நிதிஉதவி பெற்றுக் கொடுக்க மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கம் தயாராக உள்ளதெனவும் அறிவிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரர் பூரண விபரம் அடங்கிய மாணவர் பாடத்திட்டம், தற்போதய தொழில், பயிற்சியின் பின் செய்யவிருக்கும் தொழில், பயிற்சி பெறவிரும்பும் பகுதி என்பவற்றை தமது விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். பயிற்சிபெற விரும்பும் பகுதிகள் தொடர்பாக மேற்படி சங்கத்தலைவருடன் நேரில் தொடர்பு கொளுமாறு அறிவிக்கப்கப்பட்டுள்ளது.

# நல்லூரில் கிராம அலுவலர் பிரிவு அதிகரிப்பு

பதினைந்து கிராம சேவை அலுவலர்களைக்கொண்டிருந்த நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு தற்பொழுது நாற்பது கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டதாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது,

கிராம சேவையாளர்களாக நியமனம் பெற்ற இப்பகுதி விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள், பயிர்ச்செய்கை உந்தி யோகத்தர்கள் ஆகியோர் இப்புதிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் (55)

## சுவையான செய்திகள்

### நடிப்பாளுமன்றம் உருவாகிறது

அண்மையில் நடந்து முடிந்த பாரதப் பொதுத் தேர்தல்களில் வேட்பாளர்களாக நின்று வெற்றிபெற்ற சினிமா நடிகர், நடிகைகளின் பட்டியல் இது:- சுனில்டற், வையந்திமாலா, ஜி கிருஷ்ணு, ஜமுனு, இந்த நட்சத்திர எம், பீக்கள் நாடாளுமன்றத்திற்கு வரும்போது முழுமையான''மேக்கப்''புடன் வந்தாற்தான், பலருக்கு அடையாளந் தெரியும். எம். பீகளிற் பலர் நட்சத்திர எம் பீக்களிடம் எழும்பி நின்றும், அல்லது, குனிந்து நின்றும் ''ஒற்றோக்ருஃப்''வாங்கலாம் என்று ஒருபத்திரிகை கிண்டல் செய்துள்ளது. இந்தத் திரையுலக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இ காங்கிரசைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது ஏற்கனவே, அங்கு உள்ளவர்களும் ''நடிப்பதில்'' வல்லவர்களே. இப்போது அங்கு போயிருப்பவர்களும் நடிகர், நடிகைகளே. சும்மா சொல்லக்கூடாது; அது ஒரு அட்டகாசமான நடிப்பாளுமன்றமேதான்!

### வாய்நிறைய வைரங்கள்

ஒருவரைப் பாராட்டும்போது அவருக்கு வாய் நிறையச் சர்க்கரை போடவேண்டும் என்று சொல்வார்கள். ஒருவரைப் பரராட்ட வாய் நிறைய வைரங்களைப் போட்டவரும் உண்டு. அவர்தான் காஸ்னு மன்னர் சுல்தான் முகம்மது இவரது அரசவைக் கவிஞராக இருந்த அன்சூர் கவிதைகள் பாடுவதில் மிகவும் பெயர் பெற்றவர். அன்சூரின் கவிதைகள் மல்லிகை நறுமணம் போல் இனிமை மிக்கவை. ஒருமுறை இவரது கவிதை இன்பத்தில் திளைத்த சுல்தான் இவருக்குப் பரிசாக விலை மதிப்புள்ள வைரக்கற்களை மூன்றுமுறை அவரது வாய் நிரம்பப் போட்டார். மகிழ்வுற்ற கவிஞர் அன்சூர்- 'எனது வாய் சிறியது மன்னு இப்படி எனக்கு மூன்று முறை வாய் வைரம் அளிப்பதாக முன்னர் தெரிந்திருந்தால் எனக்குப் பதிலாக வாய்திறக்க என் மனைவியை அழைத்து வந்திருப்பேன்' என்றதுதான் தாமதம் அந்த அரசசபை மண்டபமே சிரிப்பால் அதிர்ந்தது.

## முரசொலிக்கு வந்த கடிதம்

# விண்ணப்பங்களைத் தடுக்க அதிகாரம் வழங்கியது யார்?

ஆசிரியர்
முரசொலி

நல்லூர் சட்டநாதர் ஆலய காணியிற் குடியிருக்கும் எம்மில் பலர் கடந்தகாலச் சம்பவங்களினுற் பெரிதும் பாதிக்கப்பட்டதனுல் புனரமைப்புக்கான நிவாரணத்தைப் பெறுவதற்காக எமது விண்ணப்பங்களை எமது பகுதிக் கிராமசேவையாளரிடம் ஒப்படைத்தோம். ஆனுல் கிராமசேவையாளரோ கோயிலுக்குரிய காணி வாடகையைக் கோவில் நிர்வாகசபையிடம் செலுத்தினுல் மட்டுமே அந்த விண்ணப்பங்களை நிவாரணத்துக்காக உதவி அரச அதிபரிடம் சமர்ப்பிப்பேன் என அடம்பிடித்துவருகிருர்.

(1) இந்த ஆலயத்திற் புதிதாக உருவாக்கப்பட்ட நிர்வாக சபைக்கும், பழைய சபைக்குமிடையே இழுபறிநிலையிருப்பதால் எது சட்டபூர்வமானது என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இந்த வாடகையை நாம் எப்படிச் செலுத்த முடியும்?

(2) ஆலய வாடகைப் பணத்திற்கும், அரசாங்கம் வழங்கும் நிவாரணத்திற்கும் என்ன சம்பந்தம்?

(3) கோவில் நிர்வாகத்துக்குப் பணம் அறவிட்டுக் கொடுப்பதற்காக எமது விண்ணப்பப் படிவங்களைத் தடுத்துவைப்பதற்கு இக் கிராமசேவையாளருக்கு அதிகாரம் வழங்கியது யார்?

எனவே இது விடயத்தில் யாழ். அரசாங்க அதிபர் உடன் தலையிட்டு எமக்கு மேற்படி நிவாரணம் கிடைக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமெனக்கேட்டுக்கொள்கின்றோம்.

சட்டநாதர் கோவிலடி — ஐ. முருகன்

# மிதிபலகையில் இளைஞர்கள் எதற்காக நிற்கிருர்கள்?

ஆசிரியர்
முரசொலி

சகோதரி ஒருவர் 10. 3. 1990 சனிக்கிழமை முரசொலியில் பஸ்களில் ஆண்களின் அட்டகாசம் பற்றி எழுதியிருந்தார். இதில் உண்மை இருக்கிறது. நாம் இல்லை என்று கூறவில்லை. ஆனுல் சில சகோதரிகள் நம் போன்றவருக்கு செய்யும் கொடுமைகள் பற்றியும் எழுதத்தான் வேண்டும். பஸ்களில் மாணவிகள் மற்றும் தொழில் புரியும் பெண்கள் கூட்டமாக ஏறிவிட்டாலோ பஸ்ஸில் தனிமையாக செல்லும் இளைஞர்கள் பாடு திண்டாட்டம்தான். அவர்களின் கேலிகளையும் கிண்டல்களையும் தாங்கிக்கொள்ள முடியாது நாமெல்லாம் மிதிபலகையில் இறங்கி நிற்கவேண்டியதாகின்றது. அதிலும் முக்கியமாக எம்போன்ற கூச்ச சுபாவமுடைய இளைஞர்கள் பஸ்ஸை விட்டு இடைவழியில் இறங்கியே விடுகிருர்கள் ஆகையால் கூட்டமாக பஸ்ஸில் பிரயாணம் செய்யும் சகோதரிகளே எம்போன்ற அப்பாவி இளைஞர்கள் தனிமையில் செல்லும்போது உங்கள் அட்டகாசங்களைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணம் — தி. ரமேஸ், ச. நித்தியானந்தன்

# தமிழ்தேசிய இராணுவத்தைதேடி மலையகத்தில் கடும் தேடுதல்

தமிழ்த் தேசிய இராணுவத்தினரைத் தேடி மலையகத்திற் பெரும்தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப் பட்டுள்ளது இத்தேடுதல் நடவடிக்கையின்போது மூன்றுநபர்களை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

தற்போது நாட்டின்பல பாகங்களிலும் தங்கியிருக்கும்தமிழ்த் தேசியஇராணுவத்தினர் கலவரங்களை உண்டு பண்ணலாம் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதனுலேயே இத்தேடுதல் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது.

ஹொட்டல்கள், விடுதிகளின் உரிமையாளர்கள் தங்குவதற்கு இடமளிக்கும்பொழுது அவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பதை உறுதி செய்யவேண்டும், அத்துடன் துப்பாக்கி, வெடிப்பொருட்கள் இல்லாதிருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும் எனப் பொலிஸார் கேட்டுள்ளனர்.

# பெரும்போக நெல் விளைச்சல் பெருமளவு அதிகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1989/90 கால பெரும்போகத்தின் போது நெல் விளைச்சல் ஏக்கருக்கு சராசரி 70 புசல் கிடைத்துள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் சராசரி விளைச்சல் ஏக்கருக்கு 65 புசல் மட்டுமே அதேவேளை விவசாயத் திணைக்களம் எதிர்பார்த்ததை விட அதிகமான ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதாக விவசாயத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

81,000 ஏக்கரில் பெரும்போக வேளாண்மை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எதிர்பார்த்ததை விட அதிகமாக 103256 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

சிறந்த நீர்ப்பாசனம், தரமான உள்ளூர் விதை நெல் நோய்த்தாக்கம் குறைந்தமை போன்ற காரணங்களினுலேயே கூடிய விளைச்சலைப் பெறக்கூடியதாக இருந்தது என மட்டக்களப்பு விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# கிரிக்கெட் மத்தியஸ்தர்சங்க நடப்பு வருட ஆட்சிக்குழு

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில், யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பொழுது பின்வருவோர் ஆட்சிக்குழு உறுப்பினர்களாக நடப்பு வருடத்திற்கு, போட்டி எதுவும் இன்றி ஏகமனதாக, தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: கே பூபாலசிங்கம், உப தலைவர்கள்: பி. மகேந்திரன், எம். டி. தம்பிராசா, ரே. என். வை. மொறிஸ், டி. எம். வேதாபரணம். எல். உமாகாந்தன், செயலாளர்: கே. நந்தகுமார், தனாதிகாரி: என். விமலதாசன், செயற்குழு உறுப்பினர்கள்: ஆர். செல்வராசா, கே ஜதுகுலசிங், எம். சிதம்பரப்பிள்ளை, ஆர். ஸ்ரீதரன், என். சிவகுமார்: (16)

# 73-வது பொன் அணிபோர் 'ட்ரோ'வில் முடிந்தது

யாழ்ப்பாணக்கல்லூரிக்கும், யாழ். சம்பத்திரிசியார் கல்லூரிக்கும் இடையிலான (BATTLE OF THE GOLDS) பொன் அணிகளின் போர் என்று வர்ணிக்கப்படும் கிரிக்கெட் தொடரின் 73 வது போட்டி அண்மையில் யாழ்ப்பாணக் கல்லூரியின் பிக்னெல் மைதானத்தில்நடைபெற்ற பொழுது ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சம்பந்தரியார் கல்லூரி 210 ஓட்டங்களை பெற்று ஆட்டம் இழந்தது. ஸ்கோர் விபரம் J R வன்னியசிங்கம்- 18 S. விஜயேந்திரா- 17 A I R. இன்பசோதி- 37 S வில்டன் -02 J B பாஸ்கரசந்தர் - 12 T ஜூலியன்- 08 A. J. ஜஸ்டின் -31 Q J இம்மனுவல் -27 S. அன்ரனிதயின- 15 (ஆட்டம்இழக்காமல்)M N G அன்ரனிப்பிள்ளை-20 S. அகிலன்-00 உதிரிகள்-23 பந்து வீச்சு:- T. வீரசுதன்-19-42-4 S. ஜனார்த்தனன் -16.5-47-4 S நவீந்திரன்-5-14-1 யாழ்ப்பாணக்கல்லூரி தனது துடுப்பாட்டத்தில் 221 ஓட்டங்களை பெற்று ஆட்டம் இழந்தது சம்பந்தரிசியார் கல்லூரி அணி வீரர்கள் முறையாக பந்து தடுக்காததலினாலேயே யாழ்ப்பாணக் கல்லூரி இவ்வளவு ஓட்டங்களை பெறக்கூடியதாக இருந்தது. N. ஜென்சன்—23 N.பாஸ்கரன்-41 T. வீரசுதன் —16 S. செந்திலகுமரன்—17 K உத்தமசீலன்—15 S. ஜனார்தன் -08 S விநோதன்--51 (ஆ. இ) D. பாரதி—13 S. றவீந்திரன் —02 S. றிக்ஸன் —04 S கினிப்ராஜா—00 உதிரிகள் —31 பந்து வீச்சு:- M. N.G. அன்ரனிப்பிள்ளை —20—65 -1 S அகிலன் —07.2—11—1 A. I. R இன்பசோதி —11—44—4 G வில்டன்—14—26—3 Q. J. இம்மனுவல் —8—08—1 இப்போட்டியில் சிறந்ததுடுப்பாட்ட வீரருக்கானபரிசையும் ஆட்டத்தின் சிறந்த வீரருக்கான பரிசையும் யாழ்ப்பாணக் கல்லூரி அணிவீரன்S விநோதனும். விசேடபரிசை அதே கல்லூரியை சேர்ந்தT வீரசுதனும் பெற்றுக் கொண்டனர். சம்பந்திரிசியார் கல்லூரி அணி வீரர்களில் சிறந்த பந்து வீச்சாளர்களுக்கான பரிசையும், சகலதுறை ஆட்டக்காரருக்கான பரிசையும் A I. R.இன்பசோதியையும், சிறந்த பந்து தடுப்பாளருக்கான பரிசைJ B பாஸ்கரசுந்தரும். விசேட பரிசைT யூலியனும் பெற்றுக் கொண்டனர். பரிசில்களை பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண. பிதா பிரான்ஸிஸ். ஜோசப் அடிகளார் வழங்கினார்.

நடுவர்களாக திருவாளர்கள் C நந்தகுமார், N. விமலதாசன் ஆகியோர் கடமையாற்றினர். (16)

## தற்கொலை

3ம் பக்கத் தொடர்ச்சி

தாமும் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள். தெய்வாதீனமாக இத்தாய்மார்கள் தப்பிக்கொண்டால் இவர்கள் சட்டத்தின் பிடியில் அகப்பட்டுக் கொள்கிறார்கள்.

### தற்கொலைக்குறிப்பு;(Suicide Note)

தற்கொலை முயற்சியில் ஈடுபடும் அநேகர் உறவினர்களுக்கோ நண்பர்களுக்கோ அல்லது தகுதி வாய்ந்த அதிகாரிகளுக்கோ தற்கொலைக் குறிப்பொன்றை எழுதி வைத்துவிடுகிறார்கள் இவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டோர் தம்மைத் தாமே நொந்து மற்றவர்களை மன்னித்து விடுமாறும் தாமே தமது தற்கொலை முயற்சிக்குக் காரணம் என்றசாரத்தின் படி தற்கொலைக் குறிப்பை எழுதுகிறார்கள். ஆனால் இளம் வயதினரோ மற்றவர்களைக் குற்றம் சாட்டித்தமது வஞ்சத்தை தீர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் தமது தற்கொலைக் குறிப்பை எழுதித் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள்.

### தற்கொலை உடன்படிக்கை (SUICIDE PACT)

இது அநேகமாக இளம் காதலர்களிடையே ஏற்படுகின்றது. இரு காதலர்களும் சேர்ந்து ஒரு தனியான இடத்தை நாடித் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள். கணவன், மனைவியிடையேயும் இந்தத் தற்கொலை உடன்படிக்கை ஏற்படுத்தப்படலாம். இதன் பிரகாரம் இன்றைய நாட்களிலும் காதல் ஜோடிகள் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதை நாம் காணலாம்.

### தற்கொலை முயற்சியைத் தடுப்பது எப்படி?

கிருமிநாசினிகளைப் பாவிக்கும் விவசாயிகள் மிகக் குறைந்த அளவிலேயே கிருமிநாசினிகளை வாங்க வேண்டும். வாங்கினாலும் பாதுகாப்பான முறையில் கிருமிநாசினிகள் வீட்டில் பாதுகாக்கப்பட வேண்டும் கிருமிநாசினி வியாபாரிகள் கிருமிநாசினி வேண்டும் நபர்களின் மனத்தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாகப் பதட்டப்படும் ஒருவருக்குக் கிருமிநாசினியை விற்றல் கூடாது. இலாபமே முக்கியம் என்ற தன்நலம் கருதும் மனப்பான்மை வியாபாரிகளிடம் இருக்கக் கூடாது.

தற்சமயம் யாழ்க் குடா நாட்டில் எந்த ஆங்கிலமருந்து விற்பனை நிலையத்திற்குப் போனாலும் எந்த நஞ்சு மருந்தானாலும்சுலபமாகடாக்டரின்சீட்டு (PRESCRIPTION) இல்லாமல் வாங்கி விடலாம் ஆனால் கொழும்பு நகரில் டாக்டர் என்று அடையாளம் காட்டினாலும் மருந்துக்கடைக்காரர் மருந்து விற்கத் தயங்குகிறார்கள் இது ஒரு சட்டவிரோதமான செயல். உதாரணத்திற்கு, மனநோயளர் ஒருவர் தூக்கம் வரவில்லை என்று கேட்டதற்கு [illegible] கில மருந்து வியாபாரி [illegible] al) என்று சொல்லப்படும் பயங்கர மருந்தில் பத்து வில்லைகளை விழுங்கச் சொன்னார். இறுதியில் என்ன நடந்தது சாகும் தருவாயில்இந்நோயாளியாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, வைத்திய நிபுணரின் திறமையால் காப்பாற்றப்பட்டார் இது உண்மைச் சம்பவம் இப்படி எத்தனை எத்தனையோ சம்பவங்கள். ஆகவே, மருந்து விற்பவர்கள் டாக்டரின் மருந்துச்சீட்டு [illegible] மருந்து விற்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்

## பூநகரி உ. அ. அதிபர் பிரிவு

# பயிலுநர் ஆசிரியர்களாக தெரிவானோர் விபரம்

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து பயிலுநர் ஆசிரியர் நியமனத்திற்கு தெரிவானோர் விபரம் வருமாறு

பச்சிலைப்பள்ளி கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவில் தெரிவானோர் விபரம் நாளை பிரசுரிக்கப்படும்,

ஆரம்பபிரிவு
செல்வி பி. வயந்தி பல்லவராயன்கட்டு செல்வி வி விஜயா ஞானிமடம் செல்வி எல் சரஸ்வதி பரமாங்கேணி கே கேசவன் சிவபுரம் செல்வி ஆர் இந்திராதேவி செட்டியார்குறிச்சி எஸ் செல்வரட்ணம் வேரவில் செல்வி பி பாகிரா நாச்சிக்குடி செல்வி ஆர் தவமலர் ஞானிமடம் ஆர் எம் இஸ்மாயில் நாச்சிக்குடி செல்வி என் நவநீதமலர் மட்டுவில்நாடு செல்வி பி உமாக்காந்தி மட்டுவில்நாடு செல்வி எஸ் சுந்தராம்பாள் நல்லூர் கே பி விஜயானந்தன் நல்லூர் எஸ் செல்வநாயகம் கருக்காய்தீவு செல்வி எஸ் மாசிலா இரணைதீவு செல்வி டி கிருஷ்ணகலா தம்பிராய் செல்வி ஆர் கே நிர்மலாதேவி கரியாலைநாகபடுவான் செல்வி என் கலாரஞ்சினி தம்பிராய் ஏ அருமைநாயகம் இரணைதீவு

இஸ்லாமிய ஆரம்பபிரிவு
செல்விபிபஹீமா நாச்சிக்குடா

தமிழ்
செல்வி கே சரஸ்வதிப்பிள்ளை மட்டுவில்நாடு

கணிதம்
செல்வி ஏ காஞ்சனரூபி மட்டுவில்நாடு

விஞ்ஞானம்
திருமதி ஏ மல்லிகாதேவி மட்டுவில்நாடு

ஆங்கிலம்
திருமதி ஏ ருக்குமணிதேவி பல்லவராயன்கட்டு செல்வி என் சிவமலர் ஆலங்கேணி செல்வி பி. கிருஸ்ணவேணி ஆலங்கேணி

சமூகக்கல்வி
செல்வி ஏ மோகனேஸ்வரி ஞானிமடம் கே புஸ்பராஜா

கருங்காய்தீவு

கலை
செல்விபி பர்ஸனா நாச்சிக்குடா

சங்கீதம்
பி சிதம்பரம் நல்லூர்

நடனம்
செல்வி கே பிரேமலதா கருக்காய்தீவு

## வனிதா சாதனை



அண்மையில் யாழ்நகர் தெற்குக் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மெய் வல்லுனர் போட்டியில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி வனிதா பாலசுப்பிரமணியம் 17 வயதிற்குட்பட்ட பிரிவில் சிறந்த வீராங்கனையாகத்தெரிவு செய்யப்பட்டு அதற்கான வெற்றிக் கோப்பையைச் சுவீகரித்துள்ளார்.

இவர் 100, 200 மீட்டர் ஓட்டப்போட்டிகளிலும் நீளப் பாய்தலிலும் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளார். இவர் கெந்தி அடி வைத்துப் பாய்தலில் அகில இலங்கை ரீதியாக சாதனை நிலை நாட்டிய முன்னாள் பிரபல விளையாட்டு வீரர் நாகலிங்கம் பாலசுப்பிரமணியத்தின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# இன்றைய நிகழ்ச்சிகள்

### காரைநகரில்

காரைநகர் துறைமுகத்தில் அமைந்துள்ள குரோளப்நூலகம் இன்று வியாழக்கிழமை காலை 11 00 மணிக்கு போருட் வதிவிடப் பிரதிநிதி திரு ஆரே. எரிக்சன் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

தொழில் திணைக்களத்தினால் தற்போது நடாத்தப்படும் நடமாடும் கட்டிடக்கலை,மரவேலை பயிற்சி நிலையங்கள் இம் முறை 'போருட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் காரைநகர் 'போருட்,காரியாலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள கட்டிடத்தில் நடாத்தப்படவுள்ளது. இப்பயிற்சியினை உதவித் தொழில் ஆணையாளர்க. சிவப்பிரகாசம்-அவர்கள் இன்று வியாழக் கிழமை காலை. 9.30மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்துவைப்பார்.

### பல்கலைகழகத்தில்

எஸ். சிவலிங்கராஜா எழுதிய' வித்துவ சிரோமணிகணேசையரின் வாழ்க்கையும் பணியும்' நூல் வெளியீட்டுவிழா இன்று பிற்பகல்மூன்று மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழ் மன்றத் தலைவர் பிறிம்ராஜ் ரவிச்சந்திரா தலைமையில் நடைபெறும்.

விரிவுரையாளர் மா. வேதநாதன் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன்,சிரேஷ்ட உதவிப்பதிவாளர் இ.முருகையன், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி க. கதிரவேற்பிள்ளை, வடபிராந்திய போக்குவரத்துச் தலைவர் எஸ் கனகரஞ்சினம், தஞ்சைப் பல்கலைக்கழக சிறப்பாய்வாளர் க. வீரகத்தி ஆகியோர் கலந்து சிறப்பிப்பர் நாட்டியகலாகேசரி வழுவூர்இராமையா பிள்ளையின் மாணவி திருமதி.கல்யாணி சுந்தரலிங்கத்தின் மாணவிகள் வழங்கும் நடன அரங்கும்இடம் பெறும்.

### ஏழாலையில்

ஏழாலை சைவமகாஜன வித்தியாலய பொன்விழா பகிரங்க பொதுக்கூட்டம் இன்றுவியாழக்கிழமை காலை வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திரு வி. த. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் சிறப்புவிருந்தினராக, திரு. அ. மகாதேவவனும் கலந்து கொள்ளவுள்ள

**NEW MASTER INSTITUTE**
B M C. Lane Jaffna

★ நந்தகுமார்
★ மக்ஸி
★ பாபு
★ நாகநாதன்
★ ஐங்கரநேசன்
★ சந்திரமோகன்

ஆகிய எமது வழமையான ஆசிரியர் குழுவினால்
**90 A/L DAY CLASS**
**பிரிவு II**
**ஆரம்பம்: 19-03-90**
திங்கள் காலை 8 00மணி
03128

## அறிவித்தல்

லங்கா ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி இறுதி D.A.M பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் உடனடியாகக் கல்லூரிக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

கௌரவ செயலாளர்,
வட- இலங்கை சுதேச வைத்தியசபை.
03130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்மாவட்ட ப.நோ.கூ சங்கங்களுக்கு

## 1987-ல் மாஏற்றிய லொறி செலவு இன்னமும் வழங்கப்படவில்லை

1987-ம் ஆண்டு ஜூன் மாதம் வவுனியாவில் இருந்து யாழ்மாவட்ட ப நோ.கூ. சங்கங்கள் மா ஏற்றியதற்கான போக்குவரத்துச் செலவு இது வரை வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி லிபிரேசன் ஒப்ரேசன் நடைபெற்ற காலத்திலே வவுனியாவில் இருந்து லொறி மூலம் மா ஏற்றி வரப்பட்டது. புனர்வாழ்வு அமைச்சு இந்தப் போக்குவரத்துச் செலவை வழங்குவதாக அறிவித்தபோதும் இதுவரை வழங்கப்படவில்லை.

யாழ் மாவட்டத்தின் ஒவ்வொரு ப. நோ.கூ. சங்கத்திற்கும் தலா 50 ஆயிரம் ரூபாவரை இந்தப் போக்குவரத்துச் செலவு நிலுவையாக உள்ளது. (03)

## இரவுத் தபால் ரயிலில் இனிமேல் தபால் அனுப்பப்படும்

வட. பகுதிக்கான இரவுத் தபால்ரயிலில் தபாற் பொதிகள் அடுத்தவாரமளவில் அனுப்பப்படுமென எதிர்பார்ப்பதாக தபாற் திணைக்கள அதிகாரி ஒருவர் முரசொலிக்குத் தெரிவித்தார்.

இது அமுல்படுத்தப்பட்டால் கடிதங்கள் ஒருநாளிலேயே சம்பந்தப்பட்டவர்களுக்குப் போய்ச் சேருமெனத் தெரிவிக்கப்பட்டது. தற்போது யாழ்தேவிரயில் மூலம் தபாற்பொதிகள் அனுப்பப்படுவதால் கடிதம் போய்ச்சேருவதற்கு மூன்று நாட்கள்வரை எடுக்கின்றன.

இரவுத் தபால்ரயில் சேவையில் எவ்விதத்தடங்கலும் ஏற்படாது என்ற நம்பிக்கை வந்தவுடனே தபாற்பொதிகள் இரவு ரயிலில் அனுப்பப்படுமெனக் கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன (03)

## மன்னார் விளையாட்டரங்கு திருத்தியமைக்கப்படவுள்ளது

கடந்த சில வருடங்களாக கவனிப்பாரற்றுக் கிடந்த மன்னார் விளையாட்டரங்கு திருத்தியமைக்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பெரிய விளையாட்டு மைதானமான இது கடந்த சில வருடங்களாக கவனிப்பாரற்ற நிலையில் இருந்து வந்தது. தற்போது இம் மைதானம் திருத்தியமைக்கப்படுவதோடு இதற்கான சுற்று மதிலும் கட்டப்பட உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மன்னார் அரச அதிபர் செபநாயகம் மேற்கொண்டு வருகிறார். (ம)

### தொண்டர்

திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. வர்த்தமானி வடக்கிற்கு வரத் தாமதமாகுவது பற்றியும் இதுகுறித்தும் முரசொலி ஆசிரிய தலையங்கத்தில் பிரஸ்தாபித்திருந்தது குறிப்பிடத்தக்கது (9)

### யாழ் மாவட்ட

திலான போட்டிகளில் முதலிடம் பெற்ற பாடசாலைகள் இம் மாவட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன

இதற்கான ஏற்பாடுகளை யாழ் மாவட்ட உடற் கல்வி அதிகாரி திரு. அருணகிரிராஜா மேற்கொண்டுள்ளார். (6)

### 1354றகும அதிகமான...

கோட்டடியில் நடைபெற்ற இவ் அஞ்சலிக் கூட்டத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு தீபன் தலைமை தாங்கினர்.

தீபன் உரையாற்றுகையில் லெப்ரினன்ட்கேர்ணல் ஜொனி எத்தனையோ பல போர்க்களம் கண்டசாதனை வீரன் அப்பேர்ப்பட்ட ஓர் சுத்த மாவீரனை நிராயுதபாணியாகச் சுட்டுக் கொன்றது இந்திய இராணுவத்தின் கோழைத்தனத்தை வெளியுலகிற்கு நன்கு உணர்த்தியுள்ளது என்றார்,

விடுதலைப்புலிகளின் மகளிர் பிரிவு செல்வி மாலினி, திரு எஸ். கதிரேசு, திரு எஸ்.கனகநாயகம், திரு கே ஆலோசியஸ் ஆகியோரும் உரையாற்றினர் திரு, எஸ். விக்கினேஸ்வரன் (ஜொனியின் தந்தை) நன்றியுரை வழங்கினர்,

# வன்னி, மன்னார் மாவட்ட விவசாயிகள் அவலநிலை

வன்னிப் பகுதியில் மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள கட்டுக்கரைக் குளம், அகத்திமுறிப்புக் குளம், வியாடிக் குளம், பாவற் குளம் ஆகிய பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அனுராதபுர நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி தமிழ் பேசும் விவசாயிகள் தங்கள் தேவைகளை பிரதிப்பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவர அனுராதபுரம் செல்ல வேண்டியுள்ளது. அத்துடன் தொடர்பு கொள்வதில் மொழிச் சிக்கலையும் தமிழ் விவசாயிகள் எதிர்கொள்கிறார்கள்.

முன்னர் இந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் வவுனியா பிரதிப் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழேயே இயங்கி வந்தது குறிப்பிடத் தக்கது. (6)

## நேற்றைய சர்வகட்சி மாநாட்டில்

நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் சர்வகட்சி மாநாட்டின் செயற்குழு பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்றது. மாநாட்டில் பத்தொன்பது அரசியல் கட்சிகள் கலந்து கொண்டன. நேற்றைய செயற்குழு மாநாட்டில் பல விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

அதிகார பரவலாக்கல், தேர்தல் சீர்திருத்தம், சர்வஜன வாக்குரிமை, விகிதாசார பிரதிநிதித்துவ எல்லை, சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம், தொடர்பு சாதனங்களின் சுதந்திரம், மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்தல், கல்விக்கொள்கை, சமவாய்ப்பு, தேசிய காணிக் கொள்கை, ஜனநாயகத்தை வலுப்படுத்தல், அடிப்படை உரிமைகளை காத்தல், என்பன ஆராயப்பட்டன.

### பருத்தித்துறை...

அமைச்சிற்குச் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்தே மேற்படி கட்டிடத்தில் இருந்து பொலிஸாரை வெளியேற வேண்டுமென அமைச்சு கேட்டுள்ளது. (39)

### இந்தியப் படை

யங்களிலே உணவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு வந்தது.

இவ்விரு உணவுக் களஞ்சிய திருத்த வேலைகள் முடிவடைந்ததும் மா, அரிசி போன்றன சேமித்து வைக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (03)

### ஒவ்வொரு...

இது வரை யாழ். மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட உதவிகள் எவ்வழியில் பிரயோசனப் படுத்தப்பட்டுள்ளன என்பதையும் ஆராய்ந்து வருகின்றனர்.

ஒரு லட்சத்து ஐயாயிரம் மக்கள் தொழில் முயற்சிக்கடனுக்கு விண்ணப்பித்துள்ள போதும் சுமார் 50 ஆயிரம் பேருக்கு உதவி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது (03)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரச் செல்வன்

**செல்லத்துரை செல்வவேல்**

அச்சுவேலி வடக்கு

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 30 . 01 . 1968 | 06 . 04 . 1988 |

தந்தைக்கு ஏற்ற தனையனாக
தாய்க்கு நல்ல தலைமகனாக
உடன் பிறந்தோர்க்கு உறுதுணையாக
உற்றவர் தமக்கு உத்தமனாக
இருபது ஆண்டுகள் துருபதன் போல் வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்த இரண்டு ஆண்டுகள்......
இன்னும்
எத்தனை ஆண்டும் போனாலும் 'உதயா!'
நாம் மறவோம் உன்னை!!

அச்சுவேலி வடக்கு.
அச்சுவேலி.

தாய், தந்தை
உடன்பிறந்தோர்கள்

03132

BECON ஸ்ரீதர் சினிமா முன்பாக, யாழ்ப்பாணம்.

A/L 90 மீட்டல் வகுப்புகள்

பொருளியல் — வரதராஜன்
வர்த்தகம் — ரட்ணம்
அளவையியல் — S. S, மனோகரன்
கணக்கியல் — சௌந்தி / மரியதாஸ்
தமிழ் — தணிகாசலம் / மீரா
இந்துநாகரிகம் — ஜோதீஸ்வரன் / கிருஷ்ணா

03126

பகல் வகுப்புகள் / வார இறுதி வகுப்புகள்

ஆரம்பம்:

19-03-1990 திங்கள் 8.00 A. M.

17-03-1990 சனி 8.00 A. M.

NEW BECON (சித்ராலயா முன்பாக) ஸ்ரான்லி ரேட் யாழ்ப்பாணம்

90 A/L மீட்டல் வகுப்புக்கள் (சனி, ஞாயிறு)

- பொருளியல்: திரு. லோகசிங்கம்
- கணக்கியல்: திரு. யோகராஜா
- அளவையியல்: திரு. விக்கி
- வர்த்தகம்: பிரபல விரிவுரையாளர்
- தமிழ்: செல்வி மீரா
- இந்துநாகரிகம்: திருமதி கிருஷ்ணா

ஆரம்பம்: 24 . 03 . 90

காலை: 8 மணி

- Paper Class இலவசமாக கற்பிக்கப்படும்
- 91க்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகிறது

90/91க்கு தேவையான பாடப்புத்தகங்கள் விற்பனையாகின்றன

03124

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ... இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 15-03-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்ற